சுருக்கம்

தூத்துக்குடி மாவட்டம் – புதிதாக உருவாக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரக வளர்ச்சி பிரிவிற்கு தளவாட சாமான்கள் வாங்கப்பட்டது – திருநெல்வேலி கதர் கிராம தொழில் வாரிய தச்சுகொல்லு பணிமனைக்கு நேர் செய்ய வேண்டிய நிலுவைத் தொகை ரூ.22,275/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி4) துறை

அரசாணை (ப) எண்.596

நாள்: 29.11.2010
கார்திகை 13,
திருவள்ளுவர் ஆண்டு 2041,
படிக்கப்பட்டவை.

1. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண். வ10/57031/01, நாள் 18.10.02.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின், கடித எண். 59377/03/பொது 2–4 நாள் 19.12.2003 (ம) 13.09.10.

------

ஆணை:

தூத்துக்குடி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து 20.10.1986 அன்று பிரிக்கப்பட்டு, புதிய மாவட்டம் துவக்கப்பட்டபோது அலுவலக தளவாட சாமான்கள் வாங்குவதற்கு அரசாணை (நிலை) எண்.720, ஊரக வளர்ச்சி துறை, நாள் 10.9.1986 மூலம் ரூ.94,000/– வழங்கி ஆணை வெளியிடப்பட்டது என்றும், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.94,000/–த்தில் செலவினம் ரூ.49,992/– மட்டும் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தாத நிதி ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றும் ஆனால், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் தனது 22.09.1986 நாளிட்ட கடிதத்தில் ரூ.22,275/– மதிப்புள்ள 80 நாற்காலிகள் (அரசாணையில் அனுமதிக்கப்பட்ட 43 நாற்காலிகள் மற்றும் மாவட்ட வளர்ச்சிக் குழு (District Development Council) கூட்டங்களுக்காக கூடுதலாக 37 நாற்காலிகள்) தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்திடம் கேட்டுக் கொண்டு அதன்படி மேற்கண்ட தளவாடச் சாமான்கள் வாங்கப்பட்டன என்றும் இத்தொகைக்கான விலைப் பட்டியல்கள் 1986–1987 ஆம் நிதி ஆண்டில் பெறப்படாமல் பட்டியல்கள் 15.10.1991–ல் பெறப்பட்டதால் 10.9.1986 நாளிட்ட ஊரக வளர்ச்சி துறை அரசாணை (நிலை) எண்.720–ல் அனுமதிக்கப்பட்ட தொகை பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டது என்றும் எனவே தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் அலகு மூலமாக ரூ.22,275/– மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் வாங்கப்பட்டு பொருள்கள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக பொருள் பட்டியலில் குறிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதால் இதனை சிறப்பினமாகக் கருதி இத்தொகையை வழங்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார். இதனை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

(த.பி.பா)

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரை அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டடு, ஊரக வளர்ச்சி பிரிவிற்கு திருநெல்வேலி பேட்டை தச்சுகொல்லு பணிமனையிலிருந்து தளவாடங்கள் வாங்கிய வகையில் நிலுவைத் தொகையை நேர்செய்ய ஏதுவாக ரூ.22,275/– (ரூபாய் இருபத்து இரண்டாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து மட்டும்) ஒப்புதல் வழங்கப்படுகிறது. இச்செலவினத்தை திருநெல்வேலி பேட்டை தச்சு கொல்லு பணிமனைக்கு பெற்று வழங்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

3. மேற்கண்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2515-00 - ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 001 – நெறிப்படுத்துதலும் நிருவாகமும் I – திட்டத்தில் சேராதது. AC – மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் வளர்ச்சிப் பணியாளர்கள் 05 – அலுவலகச் செலவுகள் 05 – அறைகலன். (த.தொ.கு 2515-00-001-AC-0553)

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தினை மேற்கொள்ள தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2010–2011–ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்குரிய கருத்துருக்களை உரிய காலத்தில் தவறாது அனுப்புமாறு இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–15 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.65997/ஊ.வ/10, நாள் 24.11.10-இல் வழங்கப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1397 (ஆயிரத்து முன்னூற்று தொன்னூற்று ஏழு).

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,
சென்னை–15
மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம்.
கதர் கிராமத் தொழில் வாரிய தச்சுகொல்லு பணிமனை,
திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி.
மாவட்ட கருவூலம், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி
மாநில கணக்காயர், சென்னை–18

<u>நகல்</u>
நிதித் (ஊ.வ/வ.செ.பொது.II) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்